# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 557/2024**

**Prosecution witness : அ.சா.8** **Date : 17.02.2025.**

| | |
|---|---|
| **Name : தனலட்சுமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.04.2024 ம் தேதி நான் மேட்டூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் பொறுப்பு அலுவலராக பணியில் இருந்தேன். அன்று காலை 7.00 மணிக்கு நானும், மேட்டூர் மதுவிலக்கு தலைமை காவலர் அய்யந்துரை மற்றும் சி.ஐ.யூ பிரிவு தலைமை காவலர் கண்ணர் ஆகியோருடன் புறப்பட்டு ஜலகண்டாபுரம் காவல் நிலைய சரகம் பாண்டியன் வளவு என்ற இடத்தில் தகவலாளி சொன்ன சிவா என்பவரது வீட்டு முன்பு இருந்த பாத்ரூம் அருகில் பாத்ரூமில் அருகில் நின்று கொண்டிருந்த நபர் எங்களை பார்த்ததும் ஓடிவிட்டார்.

2. அதைப்பார்த்த நான் சந்கேப்பட்டு பாத்ரூமில் சோதனை செய்த போது பாத்ரூமில் 5 சாக்குமூட்டை பைகள் கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளை சோதனை செய்து பார்க்க அதில் ஒரு சாக்கு பையில் 180 எம்.எல் அளவுகொண்ட பிளாக்பேர்ல் பிராந்தி என்ற அரசு லேபில் ஒட்டப்பட்ட பிராந்தி அடைக்கப்பட்ட 482 பாட்டில்களும், மற்றொரு சாக்கு பையில் 180 எம்.எல் அளவுகொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி என்ற அரசு லேபில் ஒட்டப்பட்ட பிராந்தி அடைக்கப்பட்ட 478 பாட்டில்களும், மற்றொரு சாக்கு பையில் 180 எம்.எல்

அளவுகொண்ட டாப்ஸ்டார் பிராந்தி என்ற அரசு லேபில் ஒட்டப்பட்ட பிராந்தி அடைக்கப்பட்ட 382 பாட்டில்களும், மற்றொரு சாக்கு பையில் 180 எம்.எல் அளவுகொண்ட மாணிட்டர் பிராந்தி என்ற அரசு லேபில் ஒட்டப்பட்ட பிராந்தி அடைக்கப்பட்ட 248 பாட்டில்களும், மற்றொரு சாக்கு பையில் 180 எம்.எல் அளவுகொண்ட சீமன்ஸ் பிராந்தி என்ற அரசு லேபில் ஒட்டப்பட்ட பிராந்தி அடைக்கப்பட்ட 230 பாட்டில்களில் 2 பாட்டில்கள் மூடி திறந்தநிலையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

3. அப்போது வீட்டில் இருந்த சிவா என்பவரை காலை 8.30 மணிக்கு காவல் செய்து விசாரித்தபோது தேர்தல் சமயத்தில் மூன்று நாட்கள் அரசு மதுபான கடையில் விடுமுறை என்பதால் பிராந்தி பாட்டில்களை வாங்கி விற்றால் அதிக லாபத்திற்கு விற்பனை செய்யலாம் என்று ஜலகண்டாபுரம் அரசு மதுபான கடை எண் 7193 கடையின் சூப்பர்வைஸ்சர் அருள் மற்றும் விற்பனையாளர் பச்சமுத்து ஆகியோருடன் தனக்கு நல்ல பழக்கம் இருந்ததால் அவர்களிடம் பேசி கடந்த 15 நாட்களாக கொஞ்சம் கொஞ்சமாக மதுப்பாட்டில்களை வாங்கி தன் வீட்டு பாத்ரூமில் சேகரித்து 5 சாக்கு மூட்டை பைகளில் வைத்திருந்திருந்தேன் என்று சொன்னார்.

4. அப்போது மூடி திறந்த நிலையில் இருந்த 2 பிராந்தி பாட்டில்களை மூகர்ந்து பார்க்க விஷநெடி வாடை வீசியது அப்போது எதிரியை விசாரிக்க சீமன்ஸ் பிராந்தி என்ற பாட்டில்களில் மூடியை திறந்து அதிக போதை வருவதற்காக ஊமத்தைசாரு என்று நச்சு பொருளை கலந்து விற்பனைக்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் எதிரியை 8.30 மணிக்கு காவல் செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து சொன்ன வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் காலை 9.30 மணிக்கு பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** ஆகும்.

5. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி ஆஜர் செய்த தடையங்களை போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் கைப்பற்றுதல் மகசரின் மூலம்

கைப்பற்றப்பட்டது பின்னர் எதிரி மற்றும் தடயங்களுடன் மேட்டூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுக்கு வந்து எதிரியை ஆண் காவலர் மூலம் திரேக சோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகசர் **அசா.ஆ.6** ஆகும்.

6. பிறகு எதிரி மீது மேட்டூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண். 424/2024 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் குற்றவியல் நீதிமன்றம் எண்.2, மேட்டூர் அவர்களுக்கு அனுப்பிவைத்தும் இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் நான் இந்த வழக்கை புலன் விசாரணை எடுத்துக்கொண்டேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

7. சாட்சிகள் தலைமை காவலர் அய்யந்துரை மற்றும் சி.ஐ.யு தலைமை காவலர் கண்ணன் மற்றும் சாட்சி குமார் ஆகியவர்களிடம் அன்றைய தினமே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடயங்களை படிவம் 95 மூலம் பதிவு செய்து எதிரி மற்றும் தடயங்களுடன் நீதிமன்றம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. நீதிமன்றத்தில் தடயங்களுக்கு கடந்த 25.04.2024 ம் தேதி C.P.No.53/2024 பெறப்பட்டது. படிவம் 95 **அ.சா.ஆ.8** ஆகும். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள்

1. சுமார் 180 எம்.எல் அளவுள்ள Black pearl பிராந்தி பாட்டில்கள் 482 **ச.பொ.1** ஆகும். 2. சுமார் 180 எம்.எல் அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் 478 **ச.பொ.2** ஆகும். 3. சுமார் 180 எம்.எல் அளவுள்ள டாப்ஸ்டார் பிராந்தி பாட்டிகள் 382 **சா.பொ.3** ஆகும். 4. சுமார் 180 எம்.எல் அளவுள்ள Monitor பிராந்தி பாட்டில்கள் 248 **சா.பொ.4** ஆகும். 5. சுமார் 180 எம்.எல் அளவுள்ள SEAMENS பிராந்தி பாட்டில்கள் 230 **சா.பொ.5** ஆகும். 6. சுமார் 180 எம்.எல் அளவுள்ள SEAMENS பிராந்தி பாட்டில்கள் 230 அதில் சுமார் 180 அளவுள்ள 2 SEAMENS பிராந்தி தமிழக அரசு மதுபான பாட்டில்கள் ஸ்டிக்கர் நீக்கி மூடி திறந்து, மூடிய நிலையில் ஒருவித விஷ நெடியுடன் இருந்த பாட்டில்களை இரசாயன பகுப்பாய்விற்கும், நீதிமன்ற மாதிரிக்கும் எடுத்து வெள்ளை துணியால் சுற்றி

கட்டி SHO சீல் வைத்து கைப்பற்றட்டது. அது **ச.பொ.6** ஆகும்.

8. கடந்த 03.07.2024 ம் தேதி மேட்டுர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு தலைமை காவலர் சங்கரன் என்பவர் நீதிமன்ற உத்தரவு பெற்று சீலிடப்பட்ட 2 பிராந்தி பாட்டிகளில் இருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்டதையும், சீலிடப்பட்ட கவர் ஒன்றையும் நீதிமன்றத்தில் இருந்து பெற்று சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பரிசோதனைக்காக ஒப்படைத்தார்.

9. கடந்த 01.08.2024 ம் தேதி தடயங்களை பகுப்பாய்வு செய்து சான்று வழங்கிய சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குனர் திருமதி.கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே தடயங்களை ஆய்வகத்தில் ஒப்படைத்த தலைமை காவலர் சங்கரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எதிரி சிவாவை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 05.08.2024 ம் தேதி சாட்சிகள் முனியப்பன், பெருமாள், வெங்கடாசலம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்ததிலும், எதிரி சிவாவை விசாரணை செய்தததிலும், தடயங்கள் பகுப்பாய்பு செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டதை ஆய்வு செய்யததிலிருந்தும் இருந்தும் இவ்வழக்கில் எதிரி சிவா மட்டும் குற்றச்செயலில் ஈடுபட்டது உண்மை என்று தெரியவந்தது. இவ்வழக்கில் ஜலகண்டாபுரம் 7193 மதுபான கடை சூப்பர்வைஸ்சர் அருள் மற்றும் விற்பனையாளர் பச்சமுத்து ஆகியோர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் மேற்படி எதிரிகளை நீக்கம் செய்தும், எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். எதிரி சிவா என்பவர் குற்றச் செயலில் ஈடுபட்டது உண்மை என்று தெரியவந்ததால் புலன் விசாரணை முடித்து எதிரி சிவா மீது கடந்த 05.08.2024 ம் தேதி சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act மாற்றம் செய்யப்பட்டது. கடந்த 05.08.2024 ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act ஆக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

10. இந்த வழக்கில் புகார்தாரர், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தது, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் நான்தான் என்றால் சரிதான். என்னுடைய புகார் சிவா, அருள், பச்சமுத்து ஆகிய மூன்று பேர் மீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எங்கு இருக்கும்போது தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் மேட்டுர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு பொறுப்பு இருந்தபோது தகவல் வந்தது.

11. எத்தனை மணிக்கு யார் மூலம் தகவல் கிடைத்தது என்றால் காலை 7 மணிக்கு தகவலாளி மூலம் தகவல் கிடைத்தது. தகவல் கிடைக்கும்போது காவல் நிலையத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், அய்யந்துரை என்பவர் இருந்தார். அ.சா.5 கண்ணன் என்பவர் சம்பவ இடத்தில் அனுமதியில்லாமல் மதுபானம் வைத்திருப்பதாக தகவல் அளித்தார். காலை 7 மணிக்கு அசா.5 கண்ணன் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்.

12. யார்யார் எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து எந்த வாகனத்தில் சம்பவ இடம் வந்தீர்கள் என்றால் சுமார் 7.20 மணி அளவில் காவல் நிலையத்தில் இருந்து நான் மற்றும் அசா.5, அ.சா.7 ஆகியோர் அரசு வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்தோம். நான் எனது புகாரில் சொன்னது போல் ஒரு நபர் எங்களை பார்த்ததுடன் வீட்டு வாசலில் இருந்து ஓடிவிட்டார் என்று கூறியுள்ள நிலையில் அவரை பிடிப்பதற்கு முயற்சி செய்யவில்லையா என்றால் நாங்கள் தொலைவில் வரும்போதே அவர் ஓடிவிட்டதால் அவரை பிடிக்கமுடியவில்லை.

13. நாங்கள் சோதனை செய்த பாத்ரூம் வீட்டில் எங்கிருந்தது என்றால் வீட்டிற்கு வெளியே இருந்தது. வெளியில் இருந்த பாத்ரூம் கதவு திறந்த நிலையில் இருந்தது, அதனால் நாங்கள் யாரிடமும் அனுமதி பெறவில்லை. பாத்ரூமில் சென்று யார் சோதனை செயத்து என்றால் நான் மற்றும் என்னுடன் வந்த அ.சா.5 மற்றும் அசா.7 ஆகியோர் சோதனை செய்தோம். ஐந்து மூட்டைகளில் மதுபானம் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த ஐந்து சாக்கு மூட்டைகளும் எந்த வகையாக சாக்கு மூட்டை என்றால் வெள்ளை நிற உரசாக்கு பை ஆகும். அந்து ஐந்து சாக்குகளையும் கைப்பற்றி சான்று பொருளாக ஒப்படைத்தேனா என்றால்

இல்லை.

14. ஐந்து மூட்டைகளில் இருந்த பிராந்தி பாட்டில்களையும் எங்கு வைத்து நான் சோதனை செய்தேன் என்றால் எதிரி வீட்டு முன்புறம் வைத்து சோதனை செய்தேன். எத்தனை மணிக்கு எதிரியை எங்கு வைத்து கைது செய்தீர்கள் என்றால் காலை சுமார் 8.30 மணிக்கு எதிரி வீட்டு முன்பு வைத்து கைது செய்தேன். ஐந்து மூட்டை சாக்கு பையில்இருக்கும் பிராந்தி பாட்டில்களை சோதனை செய்யும் போது எதிரி எங்கிருந்தார் என்றால் அவர் வீட்டில்தான் இருந்தார் அவரை அழைத்து அவர் முன்பாக சோதனை செய்தோம்.

15. எதிரியுடம் ஒப்புதல் வாக்குமூலம் எங்குவைத்து பதிவு செய்தேன் என்றால் எதிரியின் வீட்டு முன்பு வைத்து தான் பதிவு செய்தேன். அதனை எப்படி பதிவு செய்தேன் என்றால் மடிக்கணினியில் பதிவு செய்தேன். மடிக்கணினில் பதிவு செய்ததை எங்கு சென்று பிரிண்ட் செய்தீர்கள் என்றால் பிரிண்டரை நாங்கள் கையுடன் கொண்டு சென்றிருந்தோம். அதில் பிரிண்ட் எடுத்தோம். அ.சா.5 மற்றும் அசா.7 அவர்களை இந்த வழக்கு சம்மந்தமாக என்று எங்கு வைத்து விசாரணை செய்தீர்கள் என்றால் சம்பவம் நடந்த தினமே காவல் நிலையத்தில் வைத்து அவர்களை விசாரித்தேன்.

16. மகசர் எங்கு வைத்து தயார் செய்தீர்கள் என்றால் காலை 9.30 மணிக்கு எதிரி வீட்டு அருகில் வைத்து தயார் செய்தேன். வீட்டிற்கு அருகே என்றால் குறிப்பிட்ட எந்த இடம் என்று கூறமுடியுமா என்றால் வீட்டிற்கு வெளியே வைத்து கைப்பற்றினோம். எதிரியை கைது செய்த பின்னிட்டு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தீர்களா அல்லது கைப்பற்றுதல் மகசர் பின்னிட்டு எதிரியை கைது செய்தீர்களா என்றால் எதிரியை கைது செய்தபின்னர்தான் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன்.

17. எதிரியை கைது செய்த பின்னர் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். அ.சா.7 அய்யந்துரை அவரை விசாரிக்கும்போது என்னுடைய விசாரணையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த பின்னர் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கியதாக

சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறாக இல்லை. அ.சா.1 குமார் அவர்களை என்று எங்கு வைத்து விசாரணை செய்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். மற்ற சாட்சிகள் அசா.2, 3, 4 ஆகியோர்களை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் அரசு மதுபான கடையில் வைத்து அசா.3 மற்றும் அசா.4 அவர்களை விசாரித்தேன். அ.சா.2 பெருமாள் என்பவரை பாரில் வைத்து விசாரித்தேன். கைப்பற்றிய மதுபாட்டில்கள் அனைத்தையும் எந்த வாகனத்தில் காவல் நிலையம் கொண்டுவந்தோம் என்றால் நாங்கள் சென்ற அ தே வாகனத்தில் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களை காவல் நிலையம் கொண்டுவந்தோம்.

18. அசா.1, 2, 3, 4 ஆகிய சாட்சிகள் தனது நீதிமன்ற விசாரணையில் போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று கூறியுள்ள நிலையில் வழக்கிற்காக அவர்களை நான் விசாரித்தேன் என்று தவறுதலாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அருள் மற்றும் பச்சமுத்து ஆகிய எதிரிகளை என்ன காரணத்திற்கு இந்த வழக்கில் இருந்து நீக்கினேன் என்றா' எதிரி சிவாவை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த போது எதிரி சிவா தேர்தல் காலத்தில் மூன்று நாட்கள் விடுமுறை என்பதால் மதுபாட்டில்களை விற்றால் அதிக லாபம் பெறலாம் என்று நினைத்து அரசு மதுபான கடை கூடுதல் மேற்பார்வையாளர் அருள் மற்றும் பச்சமுத்து ஆகியோரிடம் அதிக மதுபானங்களை கேட்டப்போது அவர்கள் கொடுக்க மறுத்ததால் அவர்கள் மீது இருந்த வெறுப்பால் அவர்கள் பெயரை ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தாக சொன்னதாலும், இதர சாட்சிகள் பெருமாள், வெங்கடாசலம், முனியப்பன், ஆகியோர்களை விசாரணை செய்தபோது அருள், பச்சமுத்து ஆகியோர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் அவர்கள் பெயரை நீக்கம் செய்தேன்.

19. மாண்பமை உச்ச நீதிமன்றம் மோகன்லால் எதிர் ஸ்டேட் ஆப் பஞ்சாப் என்ற வழக்கில் புகார்தாரரை புலன் விசாரணை அதிகாரியாக இருக்க கூடாது என்றும் அவ்வாறு இருந்தால் அந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், தீர்ப்பளித்துள்ளது என்றால் நான் சம்பவம் இடம் செல்லுமபோது சம்பவ இடத்தில்

யாரும் இல்லாத காரணத்தினால் நானே புகார்அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் சண்முகராஜ் எதிர் காவல் ஆய்வாளர், தூத்துக்குடி தெற்கு காவல் நிலையம் என்ற வழக்கிலும் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஒருவரே இருந்தால் அந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று கூறியுள்ளார் எனவே இந்த வழக்கிலும் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஒருவரே என்பதால் இந்த வழக்கும் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

20. நான் சொல்வது போல் சொல்லும் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீட்டு பாத்ரூம்பில் இருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றபட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தேர்தல் சமயத்தில் வேறொங்கோ கிடைத்த மதுப்பாட்டிகளை அரசுக்கு கணக்கு காட்டுவதற்காக ஜலகண்டாபுரம் பேருந்து நிலையம் அருகே நின்று இருந்த எதிரி மீது தவறாக ஒரு வழக்கு பதிவு செய்து அதற்கு நான் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

21. நான் போட்டுவைத்த தவறான வழக்கிற்க்கு ஆதரவாக நான் தவறுதலாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 வது எதிரிகளாக சேர்க்கப்பட்ட அருள் மற்றும் பச்சமுத்து ஆகியோர்கள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்களை காப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் அவர்களை இந்த வழககில் இருந்து நீக்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.